**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**க.பொ.த (உயர்தரம்) முன்னோடிப் பரீட்சை- 2021**

**தரம் 13 (2021)** **வணிகக்கல்வி- 32-T-11** **மூன்று மணித்தியாலம**

**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி-1

1) அருண்மணி அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் 20 வருடமாக பணிபுரிந்த ஊழியராவார். தற்போது கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமையினால் இணையவழி கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் அதிகரிப்பு, கல்வித் திணைக்கள அலுவலகங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் கற்றல் வளங்களின் வன்பிரதிகளின் வெளியீடு அதிகரித்தமை என்பவற்றைக் கவனத்தில் கொண்ட தனது சுயதிறனில் தன்னம்பிக்கையுள்ள அருண்மணி தனது அரச சேவையிலிருந்து விலகி ‘விண்மீன் அச்சகம்’ என்னும் பெயரில் வணிகமொன்றை ஆரம்பித்தார். இதற்கென மூலதனத்தை சொந்தச் சேமிப்பிலிருந்தும், மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மூலமும் நிவர்த்தி செய்யத் தீர்மானித்ததுடன், புதிதாக கணினி தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்தி செய்த நான்கு ஊழியர்களை வேலைக்கமர்த்தினார். புதிய தொழில்நுட்பத்துடனான அச்சக வடிவமைப்புக்களை மேற்கொள்வதற்கான தகவல்களை இணையவழி மூலம் பெற்றுக் கொண்டு வருகின்றார்.

i) மேற்கூறிய சம்பவத்தில் இனங்காட்டப்படும் நான்கு நிறுவன வகைகளைக் குறிப்பிட்டு அவற்றை உரிமை, நோக்கம் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

ii) அரச உத்தியோகத்தில் ஈடுபடல், தனது சொந்த வணிகமொன்றை நடாத்துதல் ஆகியவற்றின் மூலம் பாலேந்திரன் பெற்றுக் கொள்ளச் கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்கள் ஒவ்வொன்று தனித்தனியாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) (அ) மேற்படி அருண்மணியின் வணிகம் பதிவு செய்யப்பட்ட வேண்டிய சட்டத்தினைக் குறிப்பிட்டு, பதிவு செய்வதற்கான காரணத்தையும் தருக.
(ஆ) ‘விண் மீன்’ அச்சகம், அரச அச்சகக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு வணிக அமைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.
(04 புள்ளிகள்)

iv) (அ) இவ் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு அருண்மணி இனங்கண்ட வாய்ப்புக்கள் இரண்டையும், அவரிடம் காணப்படும் பலங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

(ஆ) ‘விண்மீன்’ அச்சகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

v) அருண்மணியிடம் காணப்படும் முயற்சியாண்மைசார் குணாம்சங்களையும் திறன்களையும் மேலும் முன்னேற்றக் கூடிய வழிகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2)

i) (அ) ஆடை உற்பத்தி வணிகமொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் பின்பற்ற வேண்டிய வணிக ஒழுக்கநெறிகளைக் குறிப்பிடுக.

a) தரமான பொருட்கள் சேவைகளை நியாயமான விலையில் விற்பனை செய்தல்.

b) வணிகத்தின் நிலைப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதுடன், போட்டி நிலைமைகளுக்கு சிறப்பாக முகங் கொடுப்பதற்கு

c) வணிகத்தினுள் இடம்பெறும் நிதி மோசடிகள், முறைகேடுகள் என்பவற்றை தவிர்த்துக் கொள்வதற்கு

d) தொழில் வழங்குனர், தொழில் பெறுநர்களின் உரிமைகள் கடமைகளை பாதுகாப்பதற்கு

(ஆ) தற்போதைய கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமை காரணமாக உமது பிரதேசத்தில் இடம்பெற்ற முறையற்ற வியாபார நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

ii) உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் வழமையான வேலைச் சூழலில் பணிகளின் செயலாற்றத்தை முடக்கி முன்னெப்பொழுதும் இல்லாத தாக்கத்தினை தொழிற்சந்தையில் ஏற்படுத்தியுள்ள நிலையில் வீட்டிலிருந்து பணியாற்றல் என்பது வியாபாரத் தொடர்ச்சிக்கான தற்காலிக ஏற்பாடாக பெருமளவில் பிரபல்யம் அடைந்து வருகின்றது. வீட்டிலிருந்து பணியாற்றுதல் தொடர்பான நன்மைகள், தீமைகள் பற்றி ஆராய்க. (04 புள்ளிகள்)

iii) (அ) பங்குடைமை வணிகமொன்றில் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் நான்கு தருக.

(ஆ) பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(1) கம்பனி அகவிதி

(2) கரைகடந்த கம்பனிகள் (04 புள்ளிகள்)

iv) (அ) அங்கீகார வணிக முறை ஒன்றின் மூலம் அங்கீகாரம் வழங்குபவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.

(ஆ) ஒன்றிணைதல் அல்லது கையகப்படுத்தல் இடம்பெறும் முறைகளைத் தருக. (04 புள்ளிகள்)

v) (அ) சூழற் போக்குகள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் முயற்சியாளர்களினால் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) சிற்றளவு வணிகங்களுக்கும், முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3)

i) (அ) நடைமுறையில் பெரும்பாலான சிற்றளவு வணிகங்கள் பல்வேறு காரணங்களினால் தோல்வியுறுகின்றன. சிற்றளவு வணிகங்களை வெற்றியடைய செய்வதற்கு பின்பற்றத்தக்க நடவடிக்கைகள் நான்கினைப் பிரேரிக்குக.

(ஆ) அலகுப் பொறுப்புக்களினால் முதலீட்டாளர் அடையும் நன்மைகள் இரண்டு தருக.

(04 புள்ளிகள்)

ii) (அ) பணத்தின் பண்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான நோக்கங்கள் இரண்டினையும் முன்வைக்குக.

(04 புள்ளிகள்)

iii) (அ) காசோலைக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குவதற்கு மேலதிகமாக காசோலையில் குறுக்குக் கோடிடலின் முக்கியத்துவம் இரண்டு தருக.

(ஆ) “இலத்திரனியல் பணக் கொடுக்கல், வாங்கல் செய்வதன் மூலம் வாடிக்கையாளருக்கு எப்போதும் அனுகூலங்கள் கிடைக்கப் பெறுகின்றது” இக் கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக.

(04 புள்ளிகள்)

iv) (அ) காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்குத் தேவையான அம்சங்கள் எவை?

(ஆ) பின்வரும் காப்புறுதி வகைகளை விளக்குக.

(1) உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி

(2) வழிப்பணக் காப்புறுதி

(04 புள்ளிகள்)

v) தனியார் நிறுவனமொன்று தற்போதைய ஊரடங்கு நிலைமையின் போது அதன் ஊழியர்களுக்கு விஷேட கூட்டமொன்று இணைய வழி ஊடாக (Zoom) ஊடாக 12ஆம் திகதி செப்டெம்பர் மாதம் காலை 9 மணிக்கு நடைபெற உள்ளதாக குறிப்பிட்டு அதற்கான இணைப்பினை (Link) இலத்திரனியல் தபால் மற்றும், Whats app மூலம் முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலே தரப்பட்ட சம்பவத்தில் இனங்காணப்படும் தொடர்பாடலின் அடிப்படை மூலங்களை குறிப்பிடுவதுடன் அவற்றிற்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4)

i) (அ) பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றை தெரிவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(ஆ) 'களஞ்சியப்படுத்தல்' (Ware Housing) என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

ii) (அ) வியாபாரத்தில் இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனால் பெறப்படும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) தற்போது உலகலாவிய நோய்த் தொற்றுக் காரணமாக சில்லறை வியாபார செயன்முறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) (அ) மொத்த வியாபாரி என்பவரை வரையறுக்க.

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

iv) (அ) பின்வரும் பொருட்களை ஏற்றுமதி செய்வதாயின் அனுமதி பெறும் இடங்களினைக் குறிப்பிடுக.

(1) இரத்தினக் கற்களும் தங்க ஆபரணங்களும்

(2) மரக்கறி, சுவைச்சரக்கு, வெற்றிலை

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தில் பணம் செலுத்துவதற்காக பயன்படுத்துகின்ற முறைகளைத் தருக.

(04 புள்ளிகள்)

v) தற்காலத்தில் இலத்திரனியல் வியாபார நடவடிக்கைகள் அதிகளவில் இடம்பெறும் போக்குக் காணப்படுகிறது. அந்த வகையில் இலத்திரனியல் வணிக நடைமுறைகளை படிமுறையாகக் குறிப்பிட்டு விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி – 2

5)

i) (அ) 'திட்டமிடலானது தீர்மானமெடுத்தல் செயற்பாட்டினை உள்ளடக்கியது.' இக்கூற்றினை விளக்குக.

(ஆ)

a) பாதணி உற்பத்தி நிறுவனமொன்று தனது விற்பனையை அதிகரிக்கத் தீர்மானிக்கிறது. இதற்காக பொருட்களின் விலைகளைக் குறைத்தல், பொதியிடலில் மாற்றங்களைச் செய்தல், விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை இனங்காண்கின்றது. மேற்குறித்த நடவடிக்கைகளை தீர்மானமெடுத்தல் செயன்முறையில் எந்தப் படிமுறையாக இதனைக் கருத முடியும்?

b) அதிகாரக் கையளிப்பில் உள்ளடக்கப்படும விடயங்கள் மூன்று தருக. (04 புள்ளிகள்)

ii) (அ) அமான் கம்பனியானது சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி சேய்கின்றது. இவ்வணிகம் உற்பத்திப்பகுதி, விற்பனைப் பகுதி, சந்தைப்படுத்தல், நிதி என பல்வேறு திணைக்களங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. எந்த வகையான நிறுவனக் கட்டமைப்பினை குறித்த நிறுவனத்திற்கு நீர் சிபார்சு செய்வீர். அக் கட்டமைப்பில் காணப்படும் அனுகூலங்கள் இரண்டு தருக.

(ஆ) நெறிப்படுத்தல் கருமங்களின் மூன்று பிரதான கருமங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) (அ) வணிக அமைப்பொன்றிக்கு தலைமைத்துவம் தேவைப்பாட்டிற்கான நான்கு காரணங்கள் தருக.
(ஆ) ஊழியர்களை வேலை செய்ய தூண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நிதிசார் ஊக்குவிப்பு முறைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

iv) (அ) இருப்புக் கட்டுப்பாடு தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற 'ABC' பகுப்பாய்வு என்பதனை சுருக்கமாக விபரிக்குக.
(ஆ) உற்பத்தி வணிகமொன்றிக்கு தள அமைப்புத்திட்டம் ஏன் தேவையானதாகும் என்பதற்கான காரணங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

v) (அ) ஆண்களுக்கான ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று தனது உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதற்காக "கணினி உதவியுடனான வடிவமைப்பு" (CAD) என்ற நுட்ப முறையை பயன்படுத்துகின்றது. இந்நுட்ப முறையின் அனுகூலங்கள் நான்கு தருக.
(ஆ) வணிகமொன்று உற்பத்தித் திறனை விருத்தி செய்யக் கூடிய முறைகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

6)

i) (அ) "தரக் கட்டுப்பாடு" என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) வணிகமொன்று தரக்கட்டுப்பாட்டிற்காக பிரயோகிக்கக் கூடிய நுட்ப முறைகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)

ii) (அ) சந்தைப்படுத்தலில் வழங்கல் சங்கிலி (Supply Chain) என்பதனால் கருதப்படுவது யாது?
(ஆ) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் நான்கு கூறுகளையும் தருக. (04 புள்ளிகள்)

iii) தற்போதைய கொவிட்-19 நோய்த்தொற்று ஊரடங்கு நிலைமை காரணமாக வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்ளும் சுதா வெதுப்பகமானது தனது உற்பத்திப் பொருட்களை இதற்கென வடிவமைக்கப்பட்ட வாகனத்தின் மூலம் கொண்டு சென்று நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகின்றது. இவ் வணிகம் பாணிற்கு அரசின் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்வதுடன், ஏனைய பொருட்களுக்கு கிரயத்துடன் 20% இலாபம் வைத்து விற்பனை செய்கின்றது.
(அ) மேற்குறித்த நிகழ்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் நான்கினையும் குறிப்பிட்டு அவற்றிற்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.
(ஆ)வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு சந்தைப்படுத்தல் கலவையானது முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

iv) (அ) சிறந்த சின்னமொன்றில் இருக்க வேண்டிய பண்புகள் நான்கு தருக.
(ஆ) "பொதியிடலொன்றின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்ற அடிப்படைத் தொழிற்பாடு பொருளின் பாதுகாப்பாகும்" ஆயினும் தற்போது பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாகவும் செயற்படுகின்றது. பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாகச் செயற்படுகின்ற முறையினை விபரிக்குக. (04 புள்ளிகள்)

v) சிறியளவில் அரிசி, மா வகைகளை அரைக்கும் ஆலை ஒன்றினை நிர்மாணிக்க எண்ணியுள்ள ராகுலன் நிதியீட்டம் தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளார்.
(அ) எக்கருமங்களுக்காக அவருக்கு நிதி தேவைப்படுகின்றது என்பதை உதாரணங்களுடன் விவரிக்குக.
(ஆ) அந்நிதித் தேவையினை நிறைவு செய்வதற்கான முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை என்பதனைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

7)

i) (அ) வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை (செல்வத்தை) உறுதிப்படுத்தலே நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும். இந் நோக்கத்தினை விட மேலதிகமாகக் காணப்படும் நோக்கங்கள் நான்கு தருக.
(ஆ) 'மூலதனப் பாதீடு' என்பதனால் கருதப்படுவது யாது? உதாரணம் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

ii) (அ) பொருளாதாரமொன்றில் நிதி முறைமையில் இடம் பெறுகின்ற பிரதானமானதும் முக்கியமான பணியாக இருப்பது யாது எனக் குறிப்பிடுக.
(ஆ) பொருளாதாரமொன்றில் நிதித் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ளடக்கப்படும் நிதி முறைமைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) (அ) ஆட்சேர்ப்பு செயல்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் நான்கு தருக.

(ஆ) வெளியக (புற) ரீதியாக ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் ஏற்படும் பிரதிகூலங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

iv) (அ) செயற்றிறன் மதிப்பீடு மூலம் தொழில் பெறுநர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற அனுகூலங்களைத் தருக.
(ஆ) ஊழியர்களின் துன்ப துயரங்களை தீர்க்கப்படாது விடுவதனால் நிறுவனத்திற்கு ஏற்படும் பாதகமான விளைவுகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

v) (அ)தொழில் வழங்குனர்-ஊழியர் தொடர்பு ஆகிய இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.
ஆ) வணிகங்களில் ஏற்படும் கைத்தொழில் பிணக்கு காரணமாக நுகர்வோர்க்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

8)

i) (அ) பின்வரும் தரவு முறைகளுக்குப் பொருத்தமான உதாரணம் ஒவ்வொன்று தருக.
(1) பட ரீதியான தரவு (2) புள்ளிவிபர ரீதியான தரவு
(3) செவிப்புலத் தரவு (4) கட்புலத் தரவு
(ஆ) தகவல்களை வகைப்படுத்தும் நியதிகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

ii) (அ)தகவல் முறையினை பயன்படுத்தும் மட்டத்திற்கமைய வகைப்படுத்திக் காட்டுக.

(ஆ)தற்போது கொவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பெரும்பாலும் இணையவழி மூலமே இடம்பெறுகின்றது. அந்த வகையில் இணைய வழி (Online) கற்றல் கற்பித்தல் நடவடிக்கையினால் கிடைக்கும் அனுகூலங்கள் நான்கு தருக.(04 புள்ளிகள்)

iii) நிறுவனமொன்றில் அன்றாடச் செயற்பாட்டுக் கருமங்களின் போது உருவாகின்ற தரவுகளை ஒழுங்கமைப்பதற்கு பயன்படுத்தும் கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் (TPS) முறையைப் பயன்புடுத்தக் கூடிய முகாமைத்துக் தொழிற்பாடுகள் இரண்டினைப் பெயரிட்டு, ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் இரண்டு கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைகள் வீதம் தருக. (04 புள்ளிகள்)

iv) (அ) வணிக எண்ணமொன்றை வணிக சந்தர்ப்பமாக்கிக் கொள்வதற்கு வணிகங்கள் யாது செய்தல் வேண்டும்?

(ஆ) வணிகத்திட்டம் என்பதனால் கருதப்படுவது யாது?

(இ) வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவம் இரண்டு தருக.
(04 புள்ளிகள்)

v) வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டுக் கருமங்களுக்கான செலவுகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)